## சுருக்கம்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – விரிவாக்கம் – உள்ளாட்சி அமைப்புகளை இணைத்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

### நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை

அரசாணை (நிலை) எண்.218 நாள்:28.9.2010.

C3 9973 4855/10

படிக்கப்பட்டன:

(1) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையாளர் கடிதம் எண் 5957/சி5/07 நாள் 7.9.2010.
(2) நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந.க.எண்.44571/2010/எம்.3, நாள் 21.9.2010.

---

**ஆணை:-**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர், மேலே முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், திருச்சிராப்பள்ளி நகராட்சி, 1.4.1994 முதல் மாநகராட்சியாக நிலை உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருவதாகவும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 146.9 ச.கி.மீ., 2001–ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 7,52,066 எனவும், மாநகராட்சியின் 2009–10 ம் ஆண்டு வருமானம் 180.37 கோடி எனவும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், அம்மாநகராட்சியுடன் உள்ளாட்சிகளை இணைப்பது குறித்து நகரமயமாக்கல் குறியீடுகளின் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், திருவெறும்பூர் பேரூராட்சி, பாப்பாகுறிச்சி, எல்லக்குடி, கீழ்கல்கண்டார்கோட்டை, ஆலத்தூர் ஆகிய நான்கு ஊராட்சிகள், ஏனைய உள்ளாட்சிகளைவிட மக்கள் தொகை, தனி நபர் வருமானம், சதுர கிலோ மீட்டருக்கான மொத்த வருவாய் ஆகியவை அதிகமாகவும், பிரதான விவசாயத் தொழில் புரிவோர்களின் சதவிகிதம் குறைவாகவும் இருப்பதால், அவ்வுள்ளாட்சிகள் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியுடன் இணைக்கப்படலாம் என மாநகராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகவும் (தீர்மான எண். 143, நாள் 6.9.2010) மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. மாநகராட்சியுடன் இணைப்பது குறித்து சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் கருத்து கோரப்பட்டதில், பாப்பாகுறிச்சி ஊராட்சி, மாநகராட்சியுடன் இணைய இசைவு தெரிவித்துள்ளதாகவும், எல்லக்குடி ஊராட்சி மன்றம் தமது தீர்மான எண்.349, நாள் 30.8.2010–ல் மாநகராட்சியுடன் இணைய இசைவு தெரிவித்திருந்ததாகவும், பின்னர் அவ்வூராட்சியை இணைக்க வேண்டாமென 3.9.2010–ல் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகவும், மேலும், திருவெறும்பூர் பேரூராட்சி, கீழ்கல்கண்டார்கோட்டை, மற்றும் ஆலத்தூர் ஊராட்சி மன்றங்கள், மாநகராட்சியுடன், அவ்வுள்ளாட்சிகளை இணைக்க வேண்டாமென தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகவும் ஆணையர் தெரிவித்துள்ளார்.

4. உத்தேச மாநகராட்சி விரிவாக்கம், நிர்வாகத்திற்கு ஏற்புடையதாகவும், மாநகராட்சி மையப்பகுதியிலிருந்து 5 கி.மீ தூரத்திற்குள் அனைத்துப் பகுதிகளும் அமைவதால், மாநகரில் செயல்படுத்தப்படும் சாலை, குடிநீர், பாதாள சாக்கடை, தெருவிளக்கு, திடக்கழிவு மேலாண்மை போன்ற அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதித் திட்டங்களை சிறந்த முறையில் ஒருங்கிணைத்து திட்டமிடவும், செயல்படுத்தவும் ஏதுவாக மேற்கண்ட உள்ளாட்சி அமைப்புகளை திருச்சிராப்பள்ளி மாநகராட்சியுடன் இணைப்பது அவசியமாகிறது எனவும் மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. நகராட்சி நிர்வாக இயக்குநர், மேலே இரண்டவாதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், எதிர்காலத்தில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும், பொது மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தவும், கிராமப்புற மக்கள் நகர்ப்புரத்திற்கு குடிபெயர்வதைத் தவிர்க்கவும் பேருதவியாக இருக்கும் என்பதால் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியுடன் திருவெறும்பூர் பேரூராட்சி, பாப்பாகுறிச்சி, எல்லக்குடி, கீழ்கல்கண்டார்கோட்டை மற்றும் ஆலத்தூர் ஆகிய ஊராட்சிகளை இணைக்க திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். பாப்பாகுறிச்சி ஊராட்சியைத் தவிர, இதர உள்ளாட்சி அமைப்புகள், மாநகராட்சியுடன் இணைக்க வேண்டாமென தீர்மானம் நிறைவேற்றியுள்ள போதும், பொதுமக்களின் நன்மை மற்றும் வேகமாக நகர்மயமாகி வருதல் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, இவ்வுள்ளாட்சி அமைப்புகளை மாநகராட்சியுடன் இணைத்தல் அவசியமாகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

6. நகராட்சி நிர்வாக இயக்குநர், மாநகராட்சி மன்றத் தீர்மானம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரின் பரிந்துரைகளின் அடிப்படையிலும், உள்ளாட்சி அமைப்புகளின் நகர்மயமாக்கலுக்கான குறியீடுகளின் அடிப்படையிலும், திருவெறும்பூர் பேரூராட்சி, பாப்பாகுறிச்சி, எல்லக்குடி, கீழ்கல்கண்டார்கோட்டை மற்றும் ஆலத்தூர் ஆகிய ஊராட்சிகளை திருச்சிராப்பள்ளி மாநகராட்சியுடன் இணைக்க அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

7. அரசு, இச்செயற்குறிப்பு தொடர்பான கவனமான பரிசீலனைக்குப் பின்னர், நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையை ஏற்று, கீழ்க்காணும் 5 உள்ளாட்சி அமைப்புகள் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியுடன் இணைக்கப்படலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

| வ. எண். | உள்ளாட்சி அமைப்பு | மக்கள் தொகை (2001–ஆம் ஆண்டு) | பரப்பளவு (ச.கி.மீ) |
|---|---|---|---|
| | **திருச்சிராப்பள்ளி மாநகராட்சி (தற்போதைய)** | 752066 | 146.90 |
| | **இணைக்கப்படவுள்ள உள்ளாட்சி அமைப்புகள்** | | |
| 1 | திருவெறும்பூர் பேரூராட்சி | 16824 | 4.16 |
| 2 | பாப்பாகுறிச்சி ஊராட்சி | 20371 | 4.92 |
| 3 | எல்லக்குடி ஊராட்சி | 4831 | 4.30 |
| 4 | கீழ்கல்கண்டார்கோட்டை ஊராட்சி | 1472 | 4.72 |
| 5 | ஆலத்தூர் ஊராட்சி | 1080 | 2.23 |
| | **மொத்தம்** | **796644** | **167.23** |

8. இவ்வாணை வெளியிடப்படுவதால் உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளின் தற்போதைய பதவிக் காலம் பாதிக்கப்படாது. மேலும், 1994–ம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டத்தின் பிரிவு 3 (1)–ன் வகைமுறைகளின்படி தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 1994–ம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டத்தின் பிரிவு 3 (1)–ன் கீழ் வெளியிடப்பட வேண்டிய வரைவு அறிவிக்கையினை அரசுக்கு, உடன் அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். சட்டப்பிரிவு 3 (1)–ன் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைக்குப் பின்னர், சிறப்பு அதிகாரி நியமிக்கப்பட்டு, விரிவுப்படுத்தப்படவுள்ள திருச்சிராப்பள்ளி மாநகராட்சிப் பகுதிகளுக்கான வார்டு எல்லைகளை நிர்ணயித்தல், மண்டலங்கள் அமைத்தல் குறித்த அறிக்கையை அனுப்ப வேண்டுமென நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். இவ்வறிக்கையின் அடிப்படையில் வார்டுகள் நிர்ணயம் செய்யப்பட்டு, விரிவுப்படுத்தப்பட்ட திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு 2011–ஆம் ஆண்டு சாதாரணத் தேர்தல் நடத்தப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. அசோக் வர்தன் ஷெட்டி**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 5.
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை– 108.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி.
ஆணையர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி.
செயல் அலுவலர், திருவெறும்பூர் பேரூராட்சி. (பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)
தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள். (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் வழியாக)

<u>நகல்:–</u>
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந.2, ந.நி.5, பேரூ.2, அ.ந.2) துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

28/9/10
பிரிவு அலுவலர்